*பிரசங்கம் 12*

# கொடுத்தலுக்கு தேவனுடைய முழுநிறைவான முன்மாதிரி

## (1 கொரிந்தியர் 16:1, 2)

*கிறிஸ்தவம் என்பது கொடுத்தலின் மார்க்கமாக உள்ளது. இது தேவனுடைய கொடை ஒன்றுடன் தொடங்கியது: "தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவான் 3:16). தேவனிடத்தில் இருந்து இரட்சிப்பை நாம் ஒரு கொடையாகப் பெற்றுள்ளோம் (எபேசியர் 2:8, 9; ரோமர் 6:23). கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம் கொடுப்பவர்களாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறோம்; இயேசு, "வாங்குகிறதைப்பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்" என்று கூறினார் (நடபடிகள் 20:35). கொடுப்பவர்கள் என்ற வகையில் நாம், மற்றவர்களுக்கு உதவ வேண்டும் - நமது அயலகத்தவர்களுக்கும் நமது நண்பர்களுக்கும் ஏழைகளுக்கும் உதவ வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக நாம் தேவனுக்குக் கொடுப்பவர்களாக இருப்பதும் அவசியமாக உள்ளது.*

*தேவனுடைய மக்கள் எப்போதுமே அவருக்குக் கொடுத்துள்ளனர். ஆபிரகாம் யுத்தத்தில் பற்றிக் கொண்டு வந்த எல்லாவற்றிலும், தேவனுடைய ஆசாரியரான மெல்கிசேதேக்குக்கு தசமபாகம் கொடுத்தார் (ஆதியாகமம் 14:18, 20; காண்க எபிரெயர் 7:4). மோசேயின் நியாயப்பிரமாணத்தின்கீழ், இஸ்ரவேல் மக்கள் தசமபாகம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டனர். இத்துடன் கூடுதலாக அவர்கள் தங்கள் மனவிருப்பத்தின்படி காணிக்கைகளும் பலிகளும் தரும்படி எதிர்பார்க்கப்பட்டனர், உதாரணமாக, ஆசரிப்புக் கூடாரத்தைக் கட்டுவதற்கு அவர்கள் மனவிருப்பத்தின்படி தாராளமாகக் காணிக்கைகளைக் கொடுத்தனர் (யாத்திராகமம் 35:29; 36:4-7). தேவனுடைய மக்களை கொடுக்க வேண்டிய பிரகாரம் கொடுக்கத் தவறியபோது, அவர்கள் தேவனுடைய தீர்க்கதரிசிகளால் கடிந்துகொள்ளப்பட்டனர் (மல்கியா 3:8, 9). இயேசு பிறந்தபோது, ஞானிகள் விலையுயர்ந்த பரிசுகளைக் கொண்டு வந்தனர் (மத்தேயு 2:11). இயேசுவின் ஊழியத்தின்போது சிலருடைய அபரிமிதமான கொடைகளினால் அவரும் அவரது சீஷர்களும் மனம் ஈர்க்கப்பட்டனர் (யோவான் 12:1-8). தொடக்ககால சபை தனது தாராளமான கொடுத்தலினால் அறியப்பட்டிருந்தது (நடபடிகள் 4:34, 35; 2 கொரிந்தியர் 8:1-5). ஆகையால், கிறிஸ்தவர்களாக வாழ்பவர்கள் தேவனிடத்தில் இருந்து ஆசீர்வாதங்களைப் பெறுபவர்களாக மாத்திரம் அல்ல, ஆனால் தேவனுக்குக் கொடுப்பவர்களாகவும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றனர்.*

*தேவனுக்கு நாம் எவ்வாறு கொடுக்க வேண்டும்? நமது கொடுத்தலை ஆளுகை*

செய்ய வேண்டிய கொள்கைகள் வேதாகமத்தின் பல இடங்களில் கருத்தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன; ஆனால் 1 கொரிந்தியர் 16:1, 2ல், கர்த்தருக்கும் அவரது சபைக்கும் கொடுப்பதற்கான ஒரு முன்மாதிரியை நாம் காண்கிறோம். அவ்வசனப்பகுதியை "கொடுத்தலுக்கு தேவனுடைய முழுநிறைவான முன்மாதிரி" என்ற வகையில் ஆழ்ந்து சிந்திக்க நாம் விரும்புகிறோம்.[1]

தேவனுக்குக் கொடுக்கையிலும் சபையின் நிதி சார்ந்த நடவடிக்கைகளிலும் நாம் பின்பற்றுவதற்குத் தேவன் ஒரு மாதிரியைக் கொடுத்தார். அந்த முன்மாதிரி என்னவாக உள்ளது மற்றும் என்னவாக இருப்பதில்லை என்பதை நாம் சுருக்கமாகத் தொகுத்துரைக்க முடியும்.

*சபையின் நடவடிக்கைகளுக்கு நிதிபெறுதலுக்கான தேவனுடைய முழுநிறைவான முன்மாதிரி என்பது,* பிங்கோ விளையாட்டுகள் நடத்துதலாகவோ அல்லது சபையில் கடைகள் வைப்பதாகவோ அல்லது பணத்திற்காக வர்த்தகர்களிடத்தில் இரந்து கேட்பதாகவோ அல்லது வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுதலாகவோ *இருப்பதில்லை.* இதை நாம் எவ்வாறு அறிகிறோம்? புதிய ஏற்பாட்டு சபையில் தேவைகள் எழுந்தபோது, அவர்கள் சபையின் உறுப்பினர்களுடைய மனப்பூர்வமான காணிக்கைகளைக் கொண்டு அவற்றைச் சந்தித்தனர்.

*கொடுத்தலினால் தேவைகளைச் சந்தித்தல் என்பதே சபை நடவடிக்கைகளுக்கு* அதன் உறுப்பினர்கள் நிதிபெறுதலுக்கான முழுநிறைவான *முன்மாதிரியாக இருக்கிறது.* சேமித்தல் மற்றும் பிறருக்கு உதவுதல் குறித்து சபையின் உறுப்பினர்களை அதன் நடத்துனர்கள் ஊக்குவிக்க வேண்டும். பின்பு அவர்கள் அந்த ஊக்குவித்தல்களை மிகவும் ஏற்புடைய செயல்களை நோக்கித் திருப்பி, சரியான முறையில் உறுப்பினர்கள் கொடுக்கும்படி அவர்களை வழிநடத்த வேண்டும். ஊக்குவித்தல்கள் முக்கியமானவையாக உள்ளன, ஆனால் ஏற்புடைய செயல்களும் அதே போன்று முக்கியமானவையாக உள்ளன. நாம் சரியான ஆவியில் செயல்பட வேண்டும், ஆனால் சரியான செயல்களையும் நாம் செய்ய வேண்டும்.

கொடுத்தல் பற்றி நாம் செய்வதற்குச் சரியான செயல் எது? இன்றைய நாட்களில் நாம் பின்பற்றுவதற்கென்று தேவன் நோக்கம் கொண்டுள்ள, கொடுத்தலுக்கான முன்மாதிரியை 1 கொரிந்தியர் 16:1, 2 வசனப்பகுதி கருத்தாகத் தெரிவிக்கிறது.

## முழுநிறைவான நோக்கம்[2]

பவுல், கொடுத்தல் பற்றிய தமது கலந்துரையாடலை, "*பரிசுத்தவான்களுக்காகச்* சேர்க்கப்படும் தர்மப்பணத்தைக்குறித்து" என்று கூறித் தொடங்கினார் (16:1; என்னால் வலியுறுத்தப்படுகிறது).[3] அந்தச் சொற்றொடர், "ஏன் கொடுக்க வேண்டும்?" என்ற கேள்விக்குப் பதில் அளிக்கிறது.

பொருளாதாரரீதியாக ஆசீர்வதிக்கப் பட்டிருக்க வேண்டும் என்பது கொடுத்தலுக்குக் கொரிந்தியர்களின் நோக்கமாக இருக்கவில்லை. குறிப்பிட்ட தொகையைக் கொடுப்பவர்கள் குறிப்பிட்ட தொகையை ஆசீர்வாதமாகப் பெறுவார்கள் என்று இவ்வசனப்பகுதி - அல்லது வேதாகமத்தின் வேறு எந்த வசனப்பகுதியும் - வாக்களிப்பதில்லை. அப்படியென்றால் கொரிந்தியர்கள் கொடுக்க வேண்டியிருந்தது ஏன்? ஏனென்றால்

எருசலேமில் இருந்த பரிசுத்தவான்களுக்கு உதவி தேவைப்பட்டது.[4]

இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்கள் கொடுக்க வேண்டியது ஏன்? (1) ஏனென்றால் தேவன் நமக்குக் கொடுத்துள்ளார், மற்றும் நாம் பதிலாக அவருக்குக் கொடுக்க விரும்ப வேண்டும் (2 கொரிந்தியர் 8:9; 9:15). நாம் அவர்மீது அன்புகூர்ந்தால், அவர் மகிமைப்படும்படி நாம் கொடுக்க விரும்புவோம். (2) ஏனென்றால், கொரிந்துவில் இருந்த சபையின் விஷயத்தின்படி, நாம் கொடுக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். கொடுக்கும்படி அவர் நமக்குக் கட்டளையிட்டுள்ளார், மற்றும் அவருக்குக் கீழ்ப்படிய நாம் விரும்புகிறோம். மற்றும், நாம் கொடுக்கும்படி தேவன் விரும்புகிறார் என்பது, கொடுத்தல் என்பது நமக்கு நல்லது என்று மறைமுகமாக உணர்த்துகிறது. (3) ஏனென்றால், தேவைகள் சந்திக்கப்பட வேண்டும். சபை என்ற வகையில் சட்டபூர்வமாக சபை செய்யக்கூடிய எந்த விஷயமும் நிறைவேற்றப் படுவதற்குக் கிறிஸ்தவர்கள் கொடுக்க முடியும். நமது கொடுத்தல் என்பது, சபையானது தேவனைத் தக்க வகையில் ஆராதிக்க, உறுப்பினர்களைக் கட்டி எழுப்ப, துன்புற்றவர்களுக்கு உதவிசெய்ய மற்றும் சொந்த நாட்டிலும் வெளிநாட்டிலும் சுவிசேஷத்தைப் பரப்ப, வழிமுறையை அளிக்கிறது. கர்த்தருடைய நாளில் நாம் கொடுக்கும்போது, நிதிச் செலவைச் சந்திக்க மாத்திரம் நாம் கொடுப்பதில்லை. நாம் ஒன்றுகூடி ஆராதிப்பதை, ஆதரவற்றவர்களுக்கு உதவுவதை மற்றும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதைச் சாத்தியமாக்குவதற்கு நாம் கொடுக்கிறோம்!

## முழுநிறைவான காலம்

கொரிந்தியர்கள் "வாரத்தின் முதல்நாள்தோறும்" கொடுக்க வேண்டும் என்று பவுல் கூறினார். பவுல் இந்த வார்த்தைகளைக் கொண்டு, "நாம் எப்போது கொடுக்க வேண்டும்?" என்ற கேள்விக்குப் பதில் அளித்தார்.[5]

நாம் ஏன் வாரத்தின் முதல் நாளில் கொடுக்க வேண்டும்? அந்த நாளில் - கர்த்தருடைய நாளில் - கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்பதற்காகக் கிறிஸ்தவர்கள் கூடிவந்த காரணத்தினால், இந்த நாள் தேர்ந்துகொள்ளப்பட்டது என்பது தெளிவு (நடபடிகள் 20:7; காண்க - வெளிப்படுத்தின விசேஷம் 1:10). முறைப்படி செய்தல் என்பது திறவுகோல் குறிப்பாக உள்ளது. கிறிஸ்தவர்கள் எப்போதாவது அல்லது விசேஷித்த வகையில் பணம் சேர்க்குதலின்போது என்பதற்கு மாறாக, ஒவ்வொரு வாரந்தோறும் கொடுக்க வேண்டும்.

வாரந்தோறும் கொடுத்தல் என்பது, கொடுத்தலுக்கான மிகச்சிறந்த திட்டமாகக் கிறிஸ்தவர்களுக்கு உள்ளது, ஏனெனில் இது சபையானது தனது வழக்கமான செலவுகளுக்குச் செலுத்த பணம் கொண்டிருப்பதை உறுதி செய்கிறது. அதேவேளையில் இது, தனிநபர்கள் பொருளாசையில் இருந்து தங்களைக் காத்துக்கொள்வதற்கு உதவுகிறது. முறையான அடிப்படையில் முதலில் நமது பணத்தில் இருந்து ஒரு பகுதியைக் கொடுத்தால், நாம் பணத்தை நம்முடையது என்று கருதும் வாய்ப்பு குறைகிறது. நாம், முறையாகக் கொடுத்தால் தாராளமாகக் கொடுத்தல் என்பதும் சுலபமாகிறது.

முறையாகக் கொடுத்தலைப் பற்றி மனச்சாட்சியில் உணர்வுடைய ஒருவர், தாம் வெளியே சென்றிருக்கும்போது கூட தமது உள்ளூர் சபைக்குழுமத்திற்கு முறையாகக் கொடுப்பார். நாம் வீட்டை விட்டு வெளியே இருக்கும்போது கூட நமது வாடகையைச் செலுத்தும்படி எதிர்பார்க்கப் படுகிறோம்.

நாம் வெளியே சென்றிருக்கும்போது கூட சபைக்குக் கொடுப்பதற்கும் அதேபோன்று கடமைப் பட்டவர்களாக இருக்கிறோம், இதற்கு நாம் பணத்தை [ஆராதிக்கச் செல்லும் நமது உறவினரிடத்தில்] தந்து செல்லலாம் அல்லது நாம் திரும்பி வரும்போது அதிகமாகக் கொடுக்கலாம். நாம் வெளியே இருக்கும்போதுகூட, சபையின் ஊழியமும் செலவுகளும் தொடருவதாலும், நாம் அந்த சபைக்குழுமத்தின் பாகமாக இருப்பதாலும், எல்லா வேளையிலும் - நாம் வெளியே செல்ல வேண்டியிருக்கும் வேளையிலும் -அந்த செலவுகளைச் சந்திப்பதற்கு நாம் உதவ வேண்டும்.

## முழுநிறைவான மக்கள்

பவுல், "*அவனவன்* . . . எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன்" என்று கூறினார் (என்னால் வலியுறுத்தப்படுகிறது). இங்கு அவர், "யார் கொடுக்க வேண்டும்?" என்ற கேள்விக்குப் பதில் அளித்தார்.

எல்லாரும் உக்கிராணக்காரர்களாக இருக்கிறோம். எல்லாரும் கீழ்ப்படிய வேண்டும். எல்லாருமே முதலாவது இராஜ்யத்தைத் தேட வேண்டும் (மத்தேயு 6:33). சரீரத்தின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும், சரீரத்திற்குச் சிலவற்றைப் பங்களிக்கின்றனர். கொடுத்தலுக்கான நிபந்தனையானது, வருமானம் ஈட்டும் ஒவ்வொருவருக்கும் நடைமுறைப்படுகிறது. இது, செல்வந்தர்கள் மற்றும் ஏழைகள், திருமணம் ஆனவர்கள் மற்றும் திருமணம் ஆகாதவர்கள், ஆண்கள் மற்றும் பெண்கள், இளைஞர்கள் மற்றும் முதியவர்கள், பெற்றோர்கள் மட்டுமல்ல ஆனால் அவர்களின் பிள்ளைகளில் கிறிஸ்தவர்களாக இருப்பவர்கள் ஆகியோருக்கும் நடைமுறைப்படுகிறது.

கொடுக்க இயலாத அளவுக்கு ஒருவர் ஏழையாக இருக்க முடியுமா? ஒருவர் வருமானம் பெற்றிருக்கவில்லை என்றால் அவர் அல்லது அவள் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப் படுவதில்லை. வேறுவகையில் கூறுவதென்றால், ஒருவர் - ஏழை விதவை (மாற்கு 12:41-44) மற்றும் மெக்கெதோனியாவில் இருந்த ஏழை மக்கள் (2 கொரிந்தியர் 8:1-5) செயல்விளக்கப்படுத்தியது போன்று - கொடுப்பதற்கு மிகவும் ஏழையாக இருக்க முடியாது. உலகத்தின் ஒவ்வொரு பகுதியிலும் உள்ள ஏழை மக்களுக்கு இந்த உண்மை பொருத்தமானதாக உள்ளது. வருமானம் உள்ள எந்த ஒரு கிறிஸ்தவரும் கொடுக்க வேண்டும்.

## முழுநிறைவான இடம்

அடுத்ததாகப் பவுல், "எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன்" என்று எழுதினார். இந்தக் கட்டளையானது, சபையின் பொதுப்பொக்கிஷத்திலே சேர்ப்பதற்காகக் கிறிஸ்தவர்கள் தங்களின் பணத்திலிருந்து ஒரு தொகையை ஒதுக்கி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டது. இது, நாம் சபைக்குக் கொடுக்க வேண்டும் என்று குறிப்பிடுவதன் மூலம், "எங்கே நாம் கொடுக்க வேண்டும்?" என்ற கேள்விக்குப் பதில் அளிக்கிறது.

சிலர் இந்த முடிவுபற்றிச் சந்தேகம் கொள்கின்றனர். பவுல் வரும்போது ஒன்றுகூட்டப்படும்படி, ஒவ்வொரு உறுப்பினரும் தனது பணத்தைச் சேர்த்து வைக்க வேண்டும் என்று அவர் மறைமுகமாகக் குறிப்பிட்டதாக அவர்கள் நம்புகின்றனர். ஒவ்வொரு நபரும் தனது சொந்தப் பணத்தில் இருந்து

*ஒரு பகுதியைத் தன் வீட்டிலேயே சேர்த்து வைக்க வேண்டும் என்று மாத்திரம், இந்தக் கட்டளை கேட்டுக் கொண்டது என்றால், அவர் ஒரு குறிப்பிட்ட நாளைக் குறிப்பிடுவது ஏன்?*

*சபைக்குத் தேவன் நியமித்துள்ள ஊழியத்தை, சபை செய்யக்கூடும்படிக்கு, சபைக்குக் கொடுக்க வேண்டும் என்பதே கடமைப்பாடாக உள்ளது: அது இழந்து போனவர்களை இரட்சித்தல், அவர்களை இரட்சிக்கப் பட்டவர்களாகக் காத்துக்கொள்ளுதல் மற்றும் தேவையில் இருக்கும் மக்களுக்கு உதவுதல் ஆகியவைகளே. வாரத்தின் முதல்நாளில் நாம் சபைக்குக் கொடுக்கும்போது, நாம் கர்த்தருக்குக் கொடுக்கிறோம். நாம் தேவனுடைய இராஜ்யமாகிய சபையை முதலாவதாக வைக்கிறோம்.*

*இந்தக் கேட்டுக்கொள்ளுதல், மற்ற வேளைகளில் மற்ற நோக்கங்களுக்காக நாம் கொடுப்பதைத் தடைசெய்வதில்லை, ஆனால் கர்த்தருடைய நாளில் காணிக்கை கொடுத்தல் என்பது சபையை ஆதரிக்க அங்கீகரிக்கப்பட்ட முறையாக உள்ளது என்று இது சுட்டிக்காண்பிக்கிறது. கிறிஸ்தவர்கள் இதற்கு அப்பாலும் கொடுக்கலாம் என்றிருக்கையில், ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் சபைக்குக் கொடுத்தல் என்பது நமது முதல் பொறுப்பாக உள்ளது. கிறிஸ்துவும் அவரது சபையும் பிரிக்கப்பட இயலாதவர்களாக உள்ளனர்; ஆகையால், சபைக்குக் கொடுத்தல் என்பது கிறிஸ்துவுக்குக் கொடுத்தலாகவே உள்ளது.*

## முழுநிறைவான விகிதம்

*கிறிஸ்தவர்கள் "தன்தன் வரவுக்குத் தக்கதாக" கொடுக்க வேண்டும். இந்த உள் வாக்கியத்தில் பவுல், "நாம் எவ்வளவு கொடுக்க வேண்டும்?" என்ற கேள்விக்குப் பதில் அளித்தார்.*

*நமக்கு மீதமானவைகளில் இருந்தோ அல்லது நாம் ஒன்றுமே இல்லாதிருக்கிறோம் என்ற வகையிலோ அல்ல, ஆனால் நமது வரவுக்குத் தக்கதாக நாம் கொடுக்க வேண்டும் என்று இந்தக் கட்டளை கருத்துத் தெரிவிக்கிறது. அந்தச் செய்தி நமக்குத் தேவைப்படுகிறது. நமது உடை உடுத்துதலைக் கொண்டு நமது சபை உறுப்பினர்களின் நிதிநிலையை முடிவுசெய்ய ஒருவர் முடிவு செய்வார் என்றால், நாம் எல்லாருமே செல்வந்தர்களாக இருக்கிறோம் என்று அவர் யூகிக்கலாம். இருப்பினும், காணிக்கையின் அடிப்படையில் உறுப்பினர்களின் நிதிநிலையை யூகிக்க அவர் முயற்சி செய்தால், அவர் என்ன முடிவுசெய்வார்? நாம் மிகவும் தேவையில் இருக்கிறோம் என்றா? நமது கொடுத்தல், நமக்கு வருமானம் உள்ளது என்பதைப் பிரதிபலிக்க வேண்டும்.*

*மேலும் பவுலின் வார்த்தைகள், சபை நமக்கு விதிப்பதன்படியோ அல்லது பிரமாணத்தினால் முடிவுசெய்யப்பட்ட எந்த விகிதாச்சாரத்தின்படியோ அல்ல, ஆனால் நமது வருமானத்திற்குத் தக்க விகிதத்தில் கொடுக்க வேண்டும் என்பதையும் கருத்தாகத் தெரிவிக்கிறது. நாம் பழைய ஏற்பாட்டின்கீழ் வாழ்வதில்லை, நாம் 10 சதவிகிதம் தரவேண்டும் என்று கோருகிற பிரமாணத்தின்கீழ் இருப்பதில்லை. இருந்தபோதிலும், நமது வருமானத்தில் எவ்வளவு பகுதி அல்லது எவ்வளவு சதவிகிதம் கொடுக்கிறோம் என்பதைப் பற்றி நாம் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும். மெக் லெய்ட்டன் அவர்கள் பின்வருமாறு கூறினார்:*

*பிரமாணத்தில் நமக்காக ஏற்படுத்தப்பட்ட எந்த ஒரு திட்டவட்டமான சதவிகிதத்தின் அடிப்படையில் அல்ல, ஆனால் அன்பின் பிரமாணத்தினால் கணக்கிடப்பட்டு, நம்மால் ஏற்படுத்தப்பட்ட குறிப்பிட்ட சதவிகிதத்தின் அடிப்படையிலேயே புதிய பிரமாணம் உள்ளது.*

*எவ்வளவு கொடுக்க வேண்டும் என்பதை தீர்மானிப்பதில் நாம் கனப்படுத்தப்படுகிறோம். இந்தப் பொறுப்பைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்! தேவன் நம்மீது வைத்துள்ள நம்பிக்கையைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்! இந்த சுயாதீனம் என்பது பொருளாசைக்கு ஒரு மூடலாகிவிடாதபடி நாம் எச்சரிக்கையாக இருப்போமாக. (1 பேதுரு 2:16.)*[6]

*கிறிஸ்தவர்கள் தமது வருமானத்தில் எத்தனை சதவிகிதம் கொடுக்க வேண்டும் என்று வேதாகமம் குறிப்பிடாது இருக்கையில், தேவனிடத்தில் இருந்து நாம் பெற்றுள்ளவை பற்றி, தேவன் நம்மிடத்தில் எதிர்பார்ப்பது என்ன என்பதைப் பற்றி மற்றும் நம்மால் என்ன செய்ய முடியும் என்பதைப் பற்றி நாம் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும். பின்பு அதே அளவு சமமான தீவிரத்தன்மையுடன் நாம், தேவனுக்குக் கொடுக்கத் திட்டமிடுவது என்ன என்பது பற்றி ஒரு உறுதிப்பாட்டை நாம் மேற்கொள்ள வேண்டும்.*

*ஒரு கிறிஸ்தவர், "தேவனிடத்தில் களவாடக்" கூடாது. இது பல வழிகளில் நடைபெறக்கூடும். (1) கடந்த ஆண்டு ஊதியத்தை கருத்தில் கொண்டு சபைக்கு நாம் காணிக்கை கொடுத்தால், விகிதாச்சாரக் கொள்கையை நாம் மீறுகிறோம். நமது தற்போதய வருமானத்தின் அடிப்படையில் நாம் கொடுக்க வேண்டும். (2) ஆராதனை ஊழியங்களுக்கு நாம் வராதிருப்பதால், கொடுக்கத் தவறுகிறபோது, தேவனுக்கு நாம் கொடுக்க வேண்டிய விஷயத்தில் அவரை நாம் ஏமாற்றுகிறவர்களாக இருக்கிறோம். அவரது செலவில் நாம் ஆதாயம் அடையக் கூடாது. (3) ஒரு வீட்டில் இருவரும் வேலை செய்கிறபோது, குடும்பத்தில் அதிக வருமானம் உள்ளது; அது அவர்களின் கொடுத்தலை அதிகப் படுத்த வேண்டும். (4) நமது திறனுக்குத் தக்காற்போன்று கொடுக்காமல் நாம் ஒரு பகுதியைக் கொடுக்கலாம். நாம் 20 சதவிகிதத்தை சபைக்குக் கொடுக்க முடியும்போது, 1 சதவிகிதத்தைக் கொடுக்கக் கூடாது. பல சபைகளில், சுமார் 10 சதவிகித உறுப்பினர்கள் காணிக்கையில் 90 சதவிகிதம் கொடுக்கின்றனர் - மற்றும் அவர்கள் சபைக்குழுமத்தில் மிகவும் செல்வந்தர்களாக இராதிருக்கலாம். சராசரிக் கிறிஸ்தவர் ஒருவர் அவரது அல்லது அவளது வருமானத்தில் 4 சதவிகிதம் கொடுக்கிறார் என்று மதிப்பிடப் பட்டுள்ளது. அது போதுமானதா? முறையாகவும் விகிதாச்சாரத்தின்படியும், ஆனால் மிகவும் கொஞ்சமாகக் கொடுக்கச் சாத்தியக்கூறு உள்ளது.*

*"ஒரு முறை ஒரு இளைஞர் தமது தந்தையை அணுகி, எனக்கு நீங்கள் கொஞ்சம் பணம் கொடுக்க முடியுமா? என்று கேட்டார். அதற்கு அவர், சரி, எவ்வளவு கொஞ்சமாக நான் உனக்குத் தரமுடியும்?" என்று பதில் கேள்வி கேட்டார். சிலவேளைகளில் நாம், இவ்வாறே கர்த்தருக்குக் கொடுக்கிறோம்.*

## *முடிவுரை*

*கிறிஸ்தவம் என்பது கொடுத்தலின் மார்க்கமாக உள்ளது. அந்த அம்சத்தில்*

*நமது கர்த்தரின் மார்க்கம், நவீன மதிப்பீடுகளுடன் முரண்படுகிறது. பெரும்பான்மையான மனிதர்கள், பெற்றுக்கொள்வதையே தங்கள் முதன்மை இலக்காகக் கொண்டுள்ளனர். மார்க்கக் குழுவினரில் சிலர், நாம் தாராளமாகக் கொடுத்தால் தேவன் பொருளாதார வகையில் நம்மை ஆசீர்வதிப்பார் என்று உரிமை கோருகின்றனர். இப்படிப்பட்ட வாக்குறுகி வேதாகமத்தில் அடங்கியிருப்பதில்லை என்றாலும், தேவன் கட்டளையிட்டுள்ளபடி நாம் கொடுத்தால், நாம் வளம் அடைகிறோம்.*

*பெற்றுக்கொள்ளுதல் என்பது கொடுத்தலுக்கான நமது நோக்கமாக இருக்கக் கூடாது. மாறாக, தேவனுக்குக் கீழ்ப்படிவதற்காக, அவருக்கு நமது நன்றியுணர்வைக் காண்பிப்பதற்காக, மற்றும் நன்மை செய்வதற்காக, நாம் கொடுக்க வேண்டும். நமது கொடுத்தலின் விளைவாக நாம் கொடுத்தலுக்கு எந்த ஒரு பெற்றுக்கொள்ளும் சிந்தனை எதுவும் இன்றி, தேவனுக்குக் கீழ்ப்படிதலினால் பலனை எதிர்பார்த்து, நாம் கொடுக்க வேண்டும்.*

---

*குறிப்புகள்*

[1]*இந்தப் பாடத்திற்கான தலைப்பு, மேக் லெய்ட்டன் அவர்களின் "This Grace Also" என்ற புத்தகத்தின் ஒரு பாடத்தில் இருந்து தழுவப்பட்டுள்ளது* (Dallas: Christian Publishing Co., 1964), 41-55. *அவரது பாடத்தில் தரப்பட்டுள்ள முதன்மைக் கருத்துக்கள் பின்வருமாறு: "முழுநிறைவான காலம்," "முழுநிறைவான மக்கள்," "முழுநிறைவான இடம்," "முழுநிறைவான அளித்தல்," "முழுநிறைவான நோக்கம்" (2 கொரிந்தியர் 9:7), "முழுநிறைவான பாகம்" மற்றும் "முழுநிறைவான செயல்முடித்தல்" (2 கொரிந்தியர் 9:7; 9:5; 8:12).* [2]*பணம் சேகரித்தலுக்குப் பின்னால் உள்ள குறிப்பிட்ட கொள்கைகள், வேதவசனப் பகுதியில் குறிப்பிடப் பட்டுள்ளன: "நான் வந்திருக்கும்போது பணஞ் சேர்க்குதல் இராதபடிக்கு" - சுயாதீனமாக, வற்புறுத்துதல் இன்றி; "உங்களில் அவனவன்" - முற்றாக அல்லது முழுமையாக; "வாரத்தின் முதல்நாள்தோறும்" - முறையாக; "தன்தன் வரவுக்குத் தக்கதாக" - சரியான விகிதத்தில்; "எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன்" - முறைப்படி.* (Adapted from C. H. Talbert, *Reading Corinthians: A Literary and Theological Commentary on 1 and 2 Corinthians* [New York: Crossroad, 1987], 105.) [3]*இவ்வசனம் மற்றும் பிறவசனப்பகுதிகளின் தொடக்கத்திற்கு இடையில் உள்ள ஒருமைப்பாடு, கொரிந்தியர்களால் பவுலினிடத்தில் கேட்கப்பட்ட கேள்விகளுடன் (1 கொரிந்தியர் 7:1; 7:25; 8:1; 12:1) தெளிவாகத் தொடர்புடையது என்பது, இந்த பணம் சேகரித்தல் பற்றி கொரிந்துவில் இருந்த சபையார் ஒரு கேள்வியைக் கேட்டிருந்தனர் என்று கருத்துத் தெரிவிக்கலாம்.* [4]*இந்தப் பணம் சேகரித்தல் பற்றி 2 கொரிந்தியர் 8; 9ம் அதிகாரங்களிலும் பேசப்படுகிறது. சகோதரத்துவத்தில் ஒருமைப்பாட்டை ஊக்குவித்தல் என்பதே, எருசலேமில் இருந்த யூதத்துவ சபைக்குக் கொடுக்கும்படி புறஜாதியாரில் உண்டான இந்த சபைகளை ஊக்குவித்ததற்குப் பவுலின் நோக்கங்களில் ஒன்றாக இருந்தது. இருப்பினும் 1 கொரிந்தியர் 16ல் அவரது வேண்டுகோள், எருசலேமில் இருந்த பரிசுத்தவான்களின் தேவையின் அடிப்படையிலானதாக உள்ளது. அத்துடன் கூடுதலாக, பவுல் வரும்போது விசேஷமாகப் பணம் சேர்க்குதல் இராதபடிக்கு, வாரந்தோறும் காணிக்கை செலுத்துதல் என்பது நோக்கமாக இருந்திருக்க வேண்டும் என்று கூறப்பட முடியும்; அவர், "நான் வந்திருக்கும்போது பணஞ் சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் ... எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன்" என்று கூறினார்.*

[5]*1 கொரிந்தியர் 16:1, 2 வசனப்பகுதி, ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் சபையானது பணம் சேகரிக்க வேண்டும் என்று கேட்கிறதா இல்லையா என்று மக்களில் சிலர் கேள்வி கேட்கின்றனர்.* [6]Layton, 51.